www.tamilarangam.net

# அமுதம்

19.7.95

கிணவ் ணைம் 6 சுளவ் ணைம் 3




சிறுவர் இலக்கிய மாத சஞ்சிகை

*Kinder freundliches Magazin*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பாருக்குள்ளே சமத்தன்மை—தொடர்
பற்றும் சகோதரத் தன்மை
யாருக்கும் தீமை செய்யாது
யெங்கும் விடுதலை செய்யும்.



அன்புச் சிறுவர் சிறுமியரே!

வாழ்க்கையில் செல்வமும் வறுமையும் ஒன்றோடொன்று தொடர்புள்ளவை. யுத்தங்களால் அல்லல்படும் உலக நாடுகளில் செயற்கை வறுமையால் மக்கள் பாதிப்புக்குள்ளாகி இருக்கிறார்கள். பெரும் செல்வர்கள் கூட திடீர் ஏழைகளாகி விடுகிறார்கள். சிறுவர்கள் உண்ண உணவின்றி உடுக்க உடையின்றி தகுந்த கல்வியின்றி உயிராபத்துக்குப் பயந்து வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

யூகோஸ்லாவியா, ரஷ்யா, தென்கொரியா போன்ற நாடுகளில் எல்லாம் தொடர்ந்து வந்த யுத்தத்தால் அனாதைகளாக்கப்படும் சிறுவர்கள் எத்தனை?. ஏன் நமது நாட்டிலும் கூட இதே நிலைமை தானே தொடர்கிறது. சமாதானப் பேச்சுக்கள் நடந்து கொண்டிருந்த வேளையில் ஓரளவிற்காவது கல்வி கற்று வந்த சிறுவர் சிறுமியர்கள் எல்லோரும் திடீர் யுத்தத்தினால் பெரிதும் பாதிப்புக்குள்ளாகி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இருக்கிறார்கள். உடல் ஊனமுற்றோர், தாய் தந்தையற்றோர், வீடிழந்தோர், இறந்தவர்கள் இவ்வாறு எம் நாட்டுச் சகோதரச் சிறுவர்கள் படும் கஷ்டங்கள் சொல்ல முடியாதவை. யுத்தம் நடைபெறும் எல்லா நாடுகளிலுமே இவை நடந்து கொண்டிருக்கின்றன.

வெளிநாட்டில் அதாவது அந்நிய மண்ணில் வாழும் நீங்கள் அதிஷ்டசாலிகள்தான். உணவும், உடையும், வீட்டுவாழ்க்கையும் உங்களுக்குக் கிடைத்திருக்கிறது. அதற்காகப் பெருமைப் பட்டுக் கொள்ளாதீர்கள். அனாதைகளாக்கப்பட்ட சிறுவர்களை நினைத்துப் பாருங்கள். ஏழ்மையில் அல்லல்படும் நம் நாட்டுச் சிறுவர்களை எண்ணிப் பாருங்கள். விளையாட்டிலும், கேளிக்கைகளில் மட்டும் ஈடுபட்டு வாழ்க்கையைப் பாழ்படுத்திக் கொள்ளாதீர்கள். நேரம் பொன்னானது. எந்த ஒரு நிமிடத்தையும் உங்கள் வாழ்க்கைக்குப் பிரயோசனமானதாக ஆக்கிக் கொள்ளுங்கள். கல்வியில் கவனம் செலுத்துங்கள். சிறந்த அறிவாளிகளாக, தொழிலதிபர்களாக உலகம் உங்களைப் பெருமை பேசட்டும். பெற்ற தாய் தந்தையர் மட்டுமல்ல, பிறந்த பொன்னாடும் உங்களால் பெருமை பெறட்டும்.

அன்புடன்

ஆசிரியை.

www.tamilarangam.net

# எட்டுக் கோழிக் குஞ்சுகள்



எட்டுக் கோழிக் குஞ்சுகள்
இரையைத் தேடிச் சென்றன,
குட்டையாக ஒரு புழு
குறுக்கே செல்லக் கண்டன.

பார்த்தவுடனே எட்டுமே
பாய்ந்து கொல்ல முயன்றன,
யார்தான் புழுவைத் தின்பது?

www.tamilarangam.net

என்று சண்டை போட்டன.

சிறகை அடித்துக் கொண்டன,
சீறித் தாவிக் கொத்தின,
குரலைக் காட்டி வேகமாய்
கோபத்தோடு கூவின

அம்மாக் கோழி குரலுமே
அந்தச் சமயம் கேட்கவே,
வம்புச் சண்டை நிறுத்தின,
மனத்தைக் கட்டுப் படுத்தின.

சண்டை ஓய்ந்து போனதும்
தரையைக் கூர்ந்து நோக்கின,
கண்ணில் அந்தப் புழுவையே
காணவில்லை, இல்லையே!

சண்டை முடியும் வரையிலும்
சாவதற்கு நிற்குமோ?
மண்டு இல்ல அப்புழு,
மகிழ்ந்து தப்பி விட்டதே!

-அழ. வள்ளியப்பா-

www.tamilarangam.net

# முல்லா கதைகள்



ஒருமுறை முல்லா பணக்காரர் ஒருவரின் வீட்டுக்குச் சென்றார். அங்கு பணக்காரரிடம் "ஐயா, ஒருவன் வாங்கிய கடனை அடைக்க முடியாமல் மிகவும் கஷ்டப் படுகிறான். அவனுக்கு உதவி செய்யக் கொஞ்சம் பணம் கொடுங்கள்" என்று கேட்டார்.

மற்றவருக்காகப் பணங் கேட்கும் முல்லாவிற்குப் பணக்காரர் உடனேயே சென்று சில பொற்காசுகள் கொண்டு வந்து கொடுத்தார்.

www.tamilarangam.net

"முல்லா, கஷ்டப்படுபவர்களுக்கு உதவுவதற்காக நீங்கள் மேற்கொள்ளும் இச்செய்கையை நான் பாராட்டுகின்றேன். கடனை அடைக்க முடியாத அம்மனிதர் யார்?" என்று பணக்காரர் கேட்டார்.

பொற்காசுகளைப் பத்திரப் படுத்திக் கொண்ட முல்லா, "அது வேறு யாருமில்லை, நானேதான்" என்று கூறியபடி அங்கிருந்து வேகமாக வெளியேறினார்.

ஒரு மாதம் சென்றது. முல்லா திரும்பவும் பணக்காரரின் முன் நின்றார். முல்லாவைக் கண்டதும் பணக்காரர் கோபங்கொண்டார். பின்பு "என்ன முல்லா, யாரோ ஒருவர் கடன் வாங்கி அடைக்க முடியாமல் கஷ்டப் படுவதற்கு நீங்கள் பணம் பெற்றுக் கொள்ள வந்தீரோ?" என்று கேட்டார்.

"ஆம் ஆனால் இம்முறை கடனை அடைக்க முடியாமல் இருப்பது நானல்ல வேறு ஒரு ஏழை" எனப் பதிலளித்தார் முல்லா. பணக்காரரின் கோபம் மறைந்தது. சில பொற்காசுகளைக் கொணர்ந்து வந்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முல்லாவிடம் கொடுத்தார். இம்முறையும் "யார் அந்த ஏழை?" எனக் கேட்டார்.

முல்லா: "என்னிடம் கடன் வாங்கியவர். அவர் பணத்தைத் திரும்பித் தருவார் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை. நான் கொடுத்த பணத்தை எப்படியாவது பெற்றுக் கொள்ள வேண்டுமே! அதனால்தான் உங்களிடம் கேட்டேன்" என்று சொன்னபடியே வேகமாக வெளியேறினார்.

**பெற்றுக் கொள்ளாவிடில்..........**

புத்தரின் எதிரியொருவர் புத்தரை ஒருமுறை சந்திக்க நேரிட்டது. அப்போது அவர் புத்தரைத் திட்டினார். அவரது திட்டு ஓயவில்லை. அப்போது புத்தர் எதிரியிடம் கேட்டார் 'யாராவது எதாவது பொருளை ஒருவருக்குக் கொடுக்க விரும்பினால் ஆனால் மற்றவர் அதைப் பெறவிரும்பாவிடில் அப்பொருள் யாருக்குச் சொந்தம்?' என்று. எதிரி சொன்னார் 'கொடுக்க விரும்பியவருக்கே' என்றார். 'நானும் நீங்கள் இதுவரை எனக்களித்த சொற்களைப் பெற்றுக் கொள்ள விரும்பவில்லை' என்றார் புத்தர்.

www.tamilarangam.net

## தங்கத்தட்டு



அது மிகவும் பழமையான கோவில். திடீரென ஒருநாள் ஏதோ ஒன்று வானத்திலிருந்து அக்கோவிலில் விழுந்தது. மக்களெல்லாம் அதைப் பார்க்கச் சென்றனர். அது ஒரு தட்டு. சாதாரண தட்டல்ல, தங்கத் தட்டு! வானத்திலிருந்து சத்தம் ஒன்றும் கேட்டது. "உங்களில் யார் ஏழைகளுக்கு

www.tamilarangam.net

நன்மை செய்கிறாரோ, அவர் இத்தட்டை வைத்துக் கொள்ளலாம்" என் றே ஒலித்தது.

அவ்வூரில் வசித்த செல்வந்தர் ஒருவர் நகைத்துக் கொண்டே "இதில் என்ன அதிசயம்? இத்தட்டு எனக்கே உரியதல்லவா? என்னைவிட இவ்வுலகில் யார் தருமத்தில் சிறந்தவராக இருக்க முடியும்?" என்று கூறியவாறே தட்டைத் தொட்டார். உடனே தங்கத்திலான அத்தட்டு பித்தளையாக மாறியது.

வேறு சிலரும் முயற்சி செய்தனர். யார் தொட்டாலும் அது உடனேயே பித்தளையாக மாறிக்கொண்டே இருந்தது. ஊர் முழுக்க இதே கதைதான். சிலர் திடீர் தர்மவான்களாகவும் மாறினர். இதனால் ஏழைகள் வயிறாரச் சாப்பிட்டனரே தவிர, திடீர் தர்மவான்கள் தொட்டபோதும் பித்தளையாக மாறியது அத்தட்டு.

ஒருமுறை ஏழைக் குடியானவன் ஒருவன் அவ்வூருக்கு வந்திருந்தான். அக்கோவிலில் கும்பிட எண்ணினான் அவன். தங்கத்தட்டை பற்றி அறியாத அவனுக்குக் கோவிலில் அவ்வளவு மக்கள் அடிபட்டுக் கொண்டு சென்றது ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. அவர்களுக்கிடையில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பிச்சைக்காரன் ஒருவன் மாட்டிக் கொண்டதை ஏழைக் குடியானவன் கண்டான்.

அக்கூட்டத்திலிருந்து பிச்சைக்காரனை மீட்டு அவனை பக்கத்திலிருந்த மரத்தின் நிழலில் படுக்க வைத்தான். சற்றுத் தூரத்தில் தெரிந்த குளத்திலிருந்து சிறிது தண்ணீர் எடுத்து அவனுக்குத் தெளித்தான். பிச்சைக்காரன் எழுந்து குடியானவனைப் பார்த்து நன்றி சொன்னான். குடியானவனும் தன்னால் ஒன்றுமே கொடுக்க முடியவில்லையே என்று மன்னிப்புக் கேட்டான்.

பின்பு கோவிலுக்குச் சென்றான். கடவுளை வணங்கினான். அதன்பின் ஓரிடத்தில் மக்கள் எல்லோரும் கூடியிருப்பதைக் கண்டான். அங்கிருந்த வயது முதிர்ந்த ஒருவரிடம் அது பற்றி வினாவினான். அவர் காரணத்தைக் கூறினார். பின்பு "தம்பி! ஏன் நீயும் முயற்சித்துப் பாரேன்" என்றார். அவர் வற்புறுத்தவே குடியானவன் தங்கத்தட்டைத் தூக்கினான். என்ன அதிசயம்! தங்கத்தட்டுத் தங்கமாகவே இருந்தது! வானத்திலிருந்து ஒரு குரல் "உங்களில் அவனே, தான் செய்த தர்மத்திற்கு எதிர்பார்க்கவில்லை, ஆகையினால் இத்தட்டு அவனுக்கே உரியது" என்றது.

www.tamilarangam.net



# எங்கள் குடும்பம்

அப்பா என்னைத் தூக்கியே
ஆசை முத்தம் கேட்கிறார்,
பாட்டுப் பாடச் சொல்கிறார்
பாடக் கேட்டுச் சிரிக்கிறார்.



அம்மா பாலைக் காய்ச்சியே
அதிலே சீனி கலக்கிறார்,
சும்மா குடிக்கத் தந்தென்னை
தூங்கு கண்ணா என்கிறார்.



அக்கா என்னை அன்புடன்
அருகில் வா வா என்கிறாள்,
சொக்காய் தைத்துத் தருகிறாள்
சீவி அழகு பார்க்கிறாள்.





அப்பா வீட்டில் இருக்கையில்
அண்ணன் பாடம் படிக்கிறான்,
அப்பா வெளியே சென்றபின்
ஆட்டம் போட அழைக்கிறான்!



பாட்டி கதைகள் சொல்கிறாள்
பாக்கை உரலில் இடிக்கிறாள்.
பாட்டி வாயில் பல் இல்லை!
பவழச் சுரங்கம் பாருங்கள்!

www.tamilarangam.net

# கெட்டிக்காரத் தவளை



குளத்திலிருந்து தவளை வெளியே வந்தது. அங்கும் இங்கும் பாய்ந்து இரை தேடியது. மேலே பறந்து கொண்டிருந்த காகம் தவளையைக் கண்டது. தவளையைத் தூக்கிக் கொண்டு பறந்தது. தவளைக்கு எப்படித் தப்புவது என்று தெரியவில்லை. காகம் தவளையோடு ஒரு வேப்பமரத்தில் அமர்ந்தது.

தவளை காகத்தைப் பார்த்துச் சிரித்தது. காகம் தவளையைப் பார்த்து 'ஏன் சிரிக்கிறாய்? என்று கேட்டது. இந்த மரத்தில் எனது தாத்தா இருக்கிறார்.

www.tamilarangam.net

அவர் என்னைப் போல மூன்று மடங்கு பருத்தவர். உன்னைப் பிடித்துச் சாப்பிட்டு விடுவார், என்று சொன்னது. காகத்துக்குப் பயமாக இருந்தது. உடனே அந்த இடத்திலிருந்து பறந்து வேறிடம் தேடியது.

பின்பு ஒரு மாமரத்தில் காகம் அமரந்தது. தவளையை உண்பதற்குத் தயாரானது. தவளையைத் தன் கால்களால் இறுக்கிப் பிடித்துக் கொண்டது. தவளை காகத்தைப் பார்த்து ' இங்கு என் அப்பா இருக்கிறார். அவருக்குக் காகத்தின் இறைச்சி மிகவும் விருப்பம். உன்னைப் பிடித்துச் சாப்பிட்டு விடுவார் என்றது. காகம் மிகவும் விரைவாகவே அவ்விடத்தை விட்டுச் சென்றது.

தவளை வாழ்ந்த குளக்கரைக்கே மீண்டும் சென்றது. தவளையைத் தின்பதற்குத் தயாரானது. தவளை காகத்தைப் பார்த்து 'என்னைத் தின்பதற்கு முன் உனது அலகைக் கல்லில் நன்றாகத் தீட்டிக் கொள் என்றது. காகமும் தன் அலகைத் தீட்டுவதற்காக தவளையைத் தன் அலகில் இருந்து விடுவித்தது. தவளை இதுதான் சமயமென்று குளத்துள் பாய்ந்து விட்டது. காகம் ஏமாற்றம் அடைந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## சொந்த நாட்டை விட்டு

சொந்த நாட்டை விட்டு வந்து
இந்த நாட்டில் வாழ்கிறோம்
சொந்த நாட்டுச் சிறுவர் படும்
துன்பம் உமக்குத் தெரியுமோ?

தாயுமின்றி தந்தையின்றி
தவிக்கும் பாலர் ஒருபுறம்
கல்வி கற்க வழியுமின்றிக்
கலங்கும் சிறுவர் ஒருபுறம்



உண்ண நல்ல உணவுமின்றி
தொடரும் யுத்தக் கொடுமையாலே
உடுக்க நல்ல உடையுமின்றி
தொடர்ந்து அல்லல் படுகின்றார்

சொந்த நாட்டை விட்டு வந்து
சொகுசாய் நீங்கள் வாழ்கிறீர்
வந்து விட்ட நாட்டில் நீங்கள்
வறுமையின்றி வாழ்கிறீர்

தாயுமுண்டு தந்தையுண்டு
தங்க நல்ல இல்லமுண்டு
படிக்கப் பள்ளிக்கூடமுண்டு
பாட ஆட நண்பருண்டு

உண்ண நல்ல உணவுமுண்டு

உடுக்க நல்ல உடையுமுண்டு
நினைத்ததெல்லாம் கிடைக்கும் நாட்டில்
நிம்மதியாய் வாழ்கிறீர்

செழிப்பு மிக்க நாட்டில் வாழும்
செல்லச் சிறுவர் சிறுமிகாள்
சிறந்த கல்வி தன்னைக் கற்று
செழிப்புடனே வாழுவீர்

அன்புடனே அனைவரையும்
அணைத்து வாழப் பழகுவீர்
பண்புடனே கல்வி கற்று
பாரினிலே வாழுவீர்

-அமுதினி-

## கெடுவான் கேடு நினைப்பான்

கந்தசாமி பணக்காரராக இருந்தாலும், தன் தந்தையார் செய்து வந்த கமத்தொழிலையே செய்து வந்தார். அவரிடம் நான்கு மாடுகள் இருந்தன. அவரது தந்தையார் இறந்தபோது அந்த மாடுகளைக் கந்தசாமியிடம் ஒப்படைத்தார். அந்த மாடுகளைப் கந்தசாமி மிக அன்புடன் வளர்த்து வந்தார்.

மாடுகள் வயலில் நன்றாக வேலை செய்தன. அவர் அன்புடன் நடத்தி வந்தபடியால், அவை

www.tamilarangam.net

விசுவாசமாக அவரிடம் நடந்தன. மாடுகளைக் கவனித்துக் கொள்ள கணபதி என்ற வேலையாள் இருந்தான். மாடுகளுக்குப் புல் அறுப்பது, குடிப்பதற்கு நீர் வார்ப்பது போன்ற வேலைகளை அவன் செய்வான். வாடிக்கையாக ஒரு கடையில் தவிடு வாங்கி வருவதும் அவன் வேலை.



அதற்கான பணத்தை முன்பணமாகவே கணபதியிடம் கொடுத்து விடுவார் கந்தசாமி. தொடக்க காலத்தில் கணபதியும் மாடுகளை நன்றாகக் கவனித்து வந்தான். நாட்கள் செல்லச் செல்ல கணபதியின் கவனிப்புக் குறைந்தது. தவிடுக்குரிய பணத்தைத் திருட்டுத் தனமாகச்

www.tamilarangam.net

சேமிக்கத் தொடங்கினான். மாடுகளைக் கவனிப்பதைக் கூடக் குறைத்துக் கொண்டான்.

மாடுகள் உணவு போதாமல் கஷ்டப்பட்டன. கொழுத்துக் கம்பீரமாக இருந்த மாடுகள் நாளடைவில் மெலியத் தொடங்கின. வயலில் வேலை செய்ய முடியாமல் களைத்தன. மாடுகளுக்கு ஏதாவது வருத்தம் வந்து விட்டதோ என்று யோசித்த கந்தசாமி மாடுகளை மிருக வைத்தியர் ஒருவரிடம் காண்பித்தார். மிருக வைத்தியர் மாடுகள் போசாக்குக் குறைந்து விட்டதால் மெலிந்திருக்கின்றன. நோய் ஒன்றுமில்லை என்று கூறினார்

கந்தசாமி தவிடு வாங்கும் கடைக்குச் சென்று விசாரித்தார். அங்கு கணபதி சில காலமாகத் தவிடு வாங்கவில்லை என்று அறிந்தார். கணபதியைக் கூப்பிட்டு விசாரித்தார். கணபதி எதுவுமே கூறாமல் மௌனம் சாதித்தான். அன்றிலிருந்து அவனை வேலையிலிருந்து நீக்கி விட்டார். கணபதி தான் பிழை விட்டதை உணராமல், கந்தசாமியிடம் கோபம் கொண்டான். கந்தசாமி வீட்டில் இல்லாத நேரத்தில் மாட்டுத் தொழுவத்திற்குச் சென்று மாடுகளைத் துன்புறுத்தினான்.

www.tamilarangam.net

வலி தாங்க முடியாத மாடுகள் கால்களால் அடித்தன. கொம்புகளால் தாக்கின. அவன் ஐயோ அம்மா என்று கத்தினான். கத்திய சத்தம் கேட்டு வந்த அயலில் உள்ளவர்கள் அவனை வைத்தியசாலையில் சேர்த்தனர். விஷயம் அறிந்த கந்தசாமி வைத்தியசாலைக்குச் சென்று அவனைப் பார்த்தார். கணபதி கந்தசாமியிடம் மன்னிப்புக் கேட்டான்.

கந்தசாமி அவனைப் பார்த்து "கெடுவான் கேடு நினைப்பான்" என்ற பழமொழி உனக்கு எவ்வளவு பொருத்தமாக இருக்கிறது பார்த்தாயா? பேசும் சக்தியற்ற மிருகங்களை வதைத்தாய். அவைகளுக்கிருக்கும் அன்பையும் விசுவாசத்தையும் அறியவில்லை. வைத்தியசாலையில் இருந்து வீட்டுக்கு வந்ததும் திரும்பவும் வேலையில் சேர்ந்து கொள் என்றார்.

கணபதியும் வருத்தம் மாறியதும் திரும்பவும் வேலையில் சேர்ந்து கொண்டான். மாடுகளை நன்றாகக் கவனித்து வந்தான். அன்புடன் நடந்தான். மாடுகளும் அவனிடம் விசுவாசமாக நடந்து கொண்டன.

www.tamilarangam.net

# ஔவையார்



அம்பர் என்ற ஊருக்குக் கம்பர் வந்திருந்தார். அந்தவூரில் சிலம்பி என்ற பெண்ணொருத்தி இருந்தாள். அவள் கம்பரைத் தன் வீட்டுக்கு அழைத்துத்

www.tamilarangam.net

தன்னைப் பற்றிக் கவிதை பாடுமாறு கேட்டாள். அவர் தனக்கு ஆயிரம் பொன் தந்தால் பாடுவதாகக் கூறினார். அவள் தனது வீடு, நிலம் எல்லாவற்றையும் விற்றாள். ஐந்நூறு பொன் கிடைத்தது.

என்னிடம் ஐந்நூறு பொன் தான் இருக்கிறது. அதைப் பெற்றுக் கொண்டு பாடுங்கள் என்று கூறிக் கொண்டு பொன்முடிச்சைக் கொடுத்தாள். கம்பரோ, அப்படியானால் அரைப்பாட்டுத் தான் பாடுவேன் என்று சொல்லி

"தண்ணீரும் காவிரியே தார் வேந்தன் சோழனே
மண்ணாவதும் சோழ மண்டலமே......

என்று

பாதிப்பாட்டைச் சுவரில் எழுதி விட்டுப் பொன்னைப் பெற்றுக் கொண்டு சென்று விட்டார். அதைப் பார்த்த சிலம்பி பெரிதும் கவலைப்பட்டாள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஊர்கள் தோறும் யாத்திரை செய்து வந்த ஔவையார் சிலம்பியின் ஊரான அம்பருக்கும் வந்தார். பசியோடு களைத்திருந்த ஔவையாரைச் சிலம்பி கண்டாள். அவரை அழைத்து வந்து உணவு கொடுத்தாள். பசியாறிய ஔவை சுவரில் எழுதப்பட்ட பாதி வெண்பாவைக் கண்டார். அதைப் பற்றிச் சிலம்பியிடம் விசாரித்தார். சிலம்பி நடந்தவற்றை ஔவையாரிடம் கூறினாள்.

ஔவையார் அந்த வெண்பாவின் மிகுதி வரிகளை முடித்துக் கொடுத்தார்.

............- பெண்ணாவாள்
அம்பர்ச் சிலம்பி அரவிந்தத் தாள் அணியும்
செம்பொற் சிலம்பே சிலம்பு.

சிலம்பி திரும்பவும் வசதியுடன் வாழத் தொடங்கினாள். அங்கு வந்த கம்பர் ஔவையார் அந்த வெண்பாவை முடித்துக் கொடுத்திருப்பதைக் கண்டார். அவருக்கு ஔவையார் மீது வெறுப்பு ஏற்பட்டது.

(தொடரும்)

www.tamilarangam.net

# சார்லி சாப்ளின்



தன்னை யாரும் கண்டு கொள்ளவில்லை என்றறிந்த சார்லிக்கு அந்தச் சுதந்திரமே சுகமாக இருந்தது. தொடர்ந்து இரண்டு நாட்கள் வீதிகளில் இறங்கிக் கடைகளைப் பார்ப்பதே பொழுது போக்காகக் கொண்டார். தனக்குப் பழக்கமானவர்களையோ, நண்பர்களையோ கூடச் சந்திக்க நினைக்கவில்லை. அவர் சிந்தனைகள் எதிர்காலம் எப்படி இருக்கப் போகின்றது என்ற கனவிலேயே மிதந்து கொண்டிருந்தது.

காப்புறுதித்தாபன மருத்துவர்களும் சார்லியைப் பரிசோதித்து விட்டுச் சென்றிருந்தனர். அந்த நினைவும் சார்லியை அலைக்கழித்தது. அடுத்த நாள் சிட்னி தம்பியைக் காணக் குதூகலத்துடன் ஓடி

www.tamilarangam.net

வந்தார். சார்லியைக் இறுகத் தழுவிக் கொண்டு 'சார்லி, எல்லாம் உனக்குச் சாதகமாகவே நடந்திருக்கின்றது. வெற்றி உன் பக்கம் தான், என்றவாறே அன்புடன் தம்பியின் முதுகில் தட்டிக் கொடுத்தார்.

அந்த வாரத்திலேயே மியூச்சுவல் பட நிறுவனத்தாருடனான ஒப்பந்தம் கைச்சாத்திடப் பட்டது. நூற்றிஐம்பதாயிரம் டொலருக்கான காசோலையை நிறுவனத்தினர் கையளித்தனர். பத்திரிகையாளர்கள் படமெடுத்துக் கொண்டார்கள். அன்று மாலையும் சார்லி வெளியே பொழுது போக்குவதற்காகச் சென்றார். 'ரைம்ஸ்' பத்திரிகையின் கட்டடத்தின் மேலே மின் எழுத்துக்களால் முக்கியமான செய்திகள் மின்னி மின்னி ஓடிக்கொண்டிருந்தன.

நிமிர்ந்து பார்த்த சார்லி தம்மையே மறந்து நின்று விட்டார். பெரிய எழுத்துக்களில் " சார்லி சாப்ளின் மியூச்சுவல் நிறுவனத்துடன் ஆண்டுக்கு அறுநூற்றி எழுபதாயிரம் டொலர் ஊதியத்தோடு ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளார்". தமது இயல்பான புன்முறுவலோடு கும்பலோடு கும்பலாக நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டார் சார்லி என்ற தீர்க்கதரிசி.

—தொடரும்—




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கோழி முட்டையிட்டது



கோழி முட்டை இட்டது.
குஞ்சு பத்துப் பொரித்தது.
பூனை நான்கைப் பிடித்தது.
புள்ளிச் சேவல் வந்தது.
பூனை ஓட்டம் எடுத்தது.
கோழிக்குஞ்சு ஆறையும்.
கூட்டிக் கோழி அணைத்தது.



-வித்தியா
சிவசுப்பிரமணியம்-

www.tamilarangam.net

# பென்னியும் அப்பிளும்



www.tamilarangam.net

பென்னி நல்ல சிறுமி தான். அவளுக்கு வகை வகையான உணவு உண்ண ஆசை. ஆனால் என்ன செய்வாள்! பாவம். வறுமையால் கஷ்டப் பட்டாள். அவளுக்கு அம்மா இல்லை. அப்பாவும் தம்பி தங்கைகள் இருந்தார்கள். பென்னி சுறுசுறுப்பாக வேலை செய்வாள். படிப்பிலும் கெட்டிக்காரி தான். ஆனால் படிப்பை நிறுத்தி விட்டார் அப்பா.

அவளை ஒரு பணகாரர் வீட்டில் வேலைக்குச் சேர்த்து விட்டார். அங்கு அவளுக்குச் சாப்பாடும் உடையும் கிடைக்கும். அவளுடைய சம்பளத்தை அப்பா வாங்கிச் சென்று விடுவார். பென்னி வீட்டில் வேலை செய்வதில்லை. கடைக்குச் சென்று பொருட்கள் வாங்கி வருவாள். பணக்காரரின் ஒரே மகளைப் பாலர்பள்ளிக்குக் கூட்டிச் செல்வது போன்ற வேலைகளைச் செய்வாள்.

இஸபெல்லாப் பாட்டியின் கடையில் அப்பிள் பழம் வாங்குவதும் அவள் வேலை. ஒவ்வொரு நாளும் பாட்டி ஐந்து அப்பிள் கொடுப்பாள். அவற்றை வாங்கிச் செல்வாள் பென்னி. அவளுக்கு அப்பிள் பழம் தின்பதற்கு நல்ல விருப்பம். வழமை போல பழம் வாங்க வந்தாள் பென்னி. உள்ளே வேலையில் இருந்த பாட்டி "ஐந்து பழங்களை எடுத்துச் செல் பென்னி" என்று நம்பிக்கையுடன் குரல் கொடுத்தாள்.

www.tamilarangam.net

இவையெல்லாம் பாட்டி இல்லாத தைரியத்தில் அப்பிள் ஒன்றைத் திருடினாள் பெண்ணி. வீட்டுக்குச் செல்வதற்கிடையில் அப்பிளைச் சாப்பிட்டாள். பழங்கள் விற்றானதும் கணக்கெடுத்துக் கொண்ட பாட்டி தான் பிழையாகக் கணக்கெடுத்து விட்டதாக எண்ணினாள். ஆனால் சில நாட்களில் இவ்வாறு நடந்தே வந்தது. சில நேரங்களில் இரண்டு மூன்று அப்பிள்கள் கூடக் குறைந்தன.

யார் எடுத்திருப்பார்கள் என்று பாட்டி யோசித்தாள். வாடிக்கைக்காரர்கள் எல்லோரிடமும் அவளுக்கு நம்பிக்கை இருந்தது. ஆனாலும் ஒவ்வொருவரையும் பாட்டி கவனித்தாள். ஒருநாள் கையும் மெய்யுமாகப் பாட்டி பெண்ணியைப் பிடித்துக் கொண்டாள். பெண்ணியிடம் அன்பும் நம்பிக்கையும் கொண்டிருந்த பாட்டிக்குக் கோபம் வந்தது.

பெண்ணியைக் கண்டபடி ஏசினாள். வீட்டு எசமானிடம் சொல்லி விடப் போவதாகவும் பயமுறுத்தினாள். பெண்ணி விக்கி விக்கி அழுதாள். எசமானிடம் சொல்ல வேண்டாமென்று மன்றாடினாள். தன் வேலை போய் விட்டால் தன் தம்பியும் தங்கைகளும் கஷ்டப்படுவார்கள் என்று சொல்லி அழுதாள். பாட்டிக்கு இரக்கமாக இருந்தது. பெண்ணிக்குப் புத்தி சொன்னாள். அன்று முதல் பெண்ணி திருந்தி விட்டாள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# போதுமென்ற மனம்



கங்கை நதிக்கரையில் செருப்புத் தைக்கும் தொழிலாளி ஒருவர் இருந்தார். அவர் யாரிடமும் கைநீட்டிக் காசு கேட்பதில்லை. கொடுப்பதை வாங்கிக் கொள்வார். உடலுழைப்பில் கிடைக்கும் ஊதியமே நிலைத்து நிற்கும் என்பது அவரது நம்பிக்கை. ஒவ்வொரு நாளும் கிடைக்கும் ஊதியத்தில் அவரும் அவருடைய குடும்பத்தினரும் மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வந்தனர்.

ஒருநாள் அவரிடம் ஒருதுறவி செருப்புத் தைக்க வந்தார். அவருடைய செருப்பை மிகவும்

www.tamilarangam.net

நேர்த்தியாகவும், அழகாகவும் தைத்துக் கொடுத்தார். துறவி அவரிடம் ஒரு முடிப்பைக் கொடுத்தார். தொழிலாளியோ அந்த முடிப்பை வாங்க மறுத்தார். துறவி அவரிடம் ஒரு கல்லை எடுத்துக் காட்டி 'இதோ பார், இது வெறும் கல்லாக எண்ணாதே. இதை வைத்திருப்பவர்கள் மிகவும் செல்வர்களாவார்கள். இதைப் பெற்றுக் கொள், என்றார்.

தொழிலாளி மீண்டும் மறுத்தார். தரவேண்டும் என்று எண்ணினால் வேறு ஏதாவது தாருங்கள். பெற்றுக் கொள்கிறேன். இது வேண்டாம். என்றார். துறவி உன் ஏழ்மையைப் பார்த்துக் கவலைப்பட்டே இக்கல்லைத் தருகிறேன். நீ வாங்க மறுக்கிறாய். ஏன்? என்று கேட்டார். சுவாமி, உழைத்துச் சாப்பிடும் சுகமே தனியானது. செல்வனானால் உடல் உழைப்பே இல்லாமல் போய்விடும். என்றார்.

துறவியோ மேலும் மேலும் ஆசை வார்த்தைகள் கூறி அதனைப் பெற்றுக் கொள்ளும்படி வற்புறுத்தினார். அப்போது தொழிலாளி 'சுவாமி, நியாயமான உழைப்பின் மூலம் கிடைக்கும் வருமானமே எனக்குப் போதும். தயவு செய்து என்னைத் தொந்தரவு செய்யாதீர்கள். வேண்டுமானால்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இதை அரசாங்கத்திடம் கொடுத்து விடுங்கள் என்றார்.

துறவி ஆச்சரியத்துடன் தொழிலாளியைப் பார்த்து 'அரசாங்கத்திடம் கொடுக்கச் சொல்கிறாய். அரசாங்கம் வறுமையாகவா இருக்கிறது? என்று கேட்டார். சுவாமி, எந்த அரசாங்கமாவது இது போதும் என்றிருப்பதில்லை. நான் போதும் என்ற நிலையிலிருக்கிறேன். எக்காலமானாலும் ஏழையாக இருப்பது அரசாங்கம் தான். என்றார். துறவி அவரின் பெருந்தன்மையைப் புகழ்ந்தார் பின் அவரை வாழ்த்தி விடை பெற்றார்.

சந்தோஷமான மனநிலை இதயத்தைக் குளிப்பாட்டுகிறது. இனிமையான வார்த்தை ஆன்மாவை மகிழ்ச்சியடையச் செய்கிறது.

பறவைகளில் மிக வேகமாக நீந்தக் கூடியது ஜென்ட்டு என்ற வகைப் பெங்குவின் தான். இது தென்துருவத்தில் வசிக்கிறது. மணிக்கு 27 கிலோமீற்றர் வேகத்தில் நீந்துகிறது.'

www.tamilarangam.net

# அதிசய மோதிரம்

ரமா பாழடைந்த மாளிகையை நோக்கி நடக்கத் தொடங்கினாள். அவள் அவ்வூரின் முடிவைக் கடந்து காடு ஒன்றின் வழியாகச் சென்றாள். அப்போது அவளது கால் வலிக்க ஆரம்பித்தவுடனே மரமொன்றின் கீழ் அமர்ந்தாள். அவளது சோகத்தை மீறியும் தூக்கம் அவளது கண்களைத் தழுவியது. நன்றாகத் தூங்கிவிட்டாள்.

'ரமா. ரமா...' என்று குரல் கேட்கவே ரமா விழித்தெழுந்தாள். யார் அந்தக் குரலை எழுப்பியது? என்று யோசித்த வேளையில் திரும்பவும் அக்குரல் கேட்டது. பக்கத்தில் இருந்த புதரின் பின்னேயிருந்துதான் அக்குரல் கேட்டிருக்க வேண்டும் என்று எண்ணி ரமா புதரின் பக்கம் சென்றாள். அவள் சரியாகத்தான் எண்ணியிருந்தாள். சிறுவன் ஒருவன் பதின்மூன்று பதினான்கு வயது இருக்கும். தனது நாய்க்குட்டியோடு விளையாடிக் கொண்டு இருந்தான்.

www.tamilarangam.net

திடீரென அந்நாய் ரமாவை நோக்கி ஓடி வந்தது. அது ரமாவைக் கண்டிருக்க வேண்டும். அது குட்டிநாயாக இருந்தும் கூட ரமா பயந்து ஓடினாள். ஓடும்போது கால் தடுக்கி விழுந்து விட்டாள். அந்த நாய் அவள் விழுந்த இடத்திற்கு ஓடி வந்தது. அப்போது நாயுடன் விளையாடிக் கொண்டிருந்த அச்சிறுவனும் அங்கு வந்து சேர்ந்தான். ரமாவைப் பார்த்ததும் 'யார் நீ? ஏன் காட்டில் இருக்கின்றாய்?' எனக் கேட்டான்.

'முதலில் நீ யார் என்று கூறு' எனத் திருப்பிக் கேட்டாள் ரமா. அப்போது தூரத்திலிருந்து 'அண்ணா! அண்ணா!' என்றவாறே ஓடி வந்தாள் அவனொத்த வயதுச் சிறுமி ஒருத்தி. 'இதோ ஓடி வருகிறாளே. இவள்தான் என் தங்கை. பெயர் சித்திராங்கி. சித்திரா என்றே வீட்டில் அழைப்போம். என் பெயர் கௌதமன் என்பதே. வீட்டுப் பெயர் கௌதமாகும். எனது அப்பாவின் வேலை மாற்றக் காரணமாக நாங்கள் இங்கு வந்திருக்கின்றோம். இனி



www.tamilarangam.net

இங்குதான் இருப்போம். அப்பாவும் அம்மாவும் இன்னும் வரவில்லை. ஆனால் நானும் தங்கையும் இங்கு எங்கள் தாத்தா இருப்பதாலும், இப்போது விடுமுறை என்பதாலும் முன்பே வந்தோம். விடுமுறை முடிந்ததும் இங்குள்ள பள்ளியில்தான் படிப்போம்' என்றான் கௌதமன்.

தூரத்திலிருந்து ஓடி வந்த அச்சிறுமி சித்திரா கௌதமனின் பக்கத்தில் வந்து

'யார் இந்தப் பெண்?' என அவளது அண்ணனிடம் கேட்டாள். அவர்களுக்குத் தனது கதையை ரமா கூறினாள். அவளது கதையைக் கேட்ட கௌதமும் சித்திராவும் அவளோடு வரப் பிரியப் பட்டனர். ரமாவும் சம்மதித்தாள். ஆனால் தாத்தா சம்மதித்தாக வேண்டுமே! அவர் சம்மதிப்பார் என்ற நம்பிக்கை கௌதமுக்கோ சித்திராவுக்கோ இல்லை.

சித்திரா சொன்னாள் 'முதலில் வீட்டுக்குப் போவோம் ரமாவை நமது சிநேகிதியென்று அறிமுகப் படுத்துவோம். மற்றதைப் பற்றிப் பின் யோசிப்போம்'



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்று. அதுதான் சரியான யோசனையாக மூன்று பேருக்கும் பட்டது. வீட்டிற்குச் சென்ற அவர்கள் தாத்தாவிடம் அறிமுகப் படுத்தியதன் பின் தோட்டத்திற்குச் சென்று தாத்தாவை எப்படிச் சம்மதிக்க வைப்பது என்று சிந்தித்தனர்.
பின்பு ரமாவிற்கு ஒரு யோசனை தோன்றியது.




அதை கௌதமிடமும் சித்திராவிடமும் கூறினாள். அதன் படியே தாத்தாவிடம் சென்று 'நாங்கள் ரமாவின் வீட்டிற்குச் சென்று சில நாட்கள் தங்கி வர எண்ணியுள்ளோம்' என்றனர். தாத்தா இதற்குச் சம்மதிக்கவில்லை. ஆனால் கௌதமும் சித்திராவும் வற்புறுத்தவே கடைசியில் சம்மதித்தார்.

(தொடரும்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஈழம்
எங்கள்
நாடென்போம்
இதற்கு
ஏது
ஈடென்போம்

-சின்ன இராஜேஸ்வரன்-

புதிய முகவரி

Siruvar Amutham
Alef Str 11
50189 Elsdorf
Germany

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்